REGD. No. M. 6311

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 177

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F

'PHONE No. 55630

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: மார்கழி 22உ புதன் (6—1—54) ☆ ☆ ☆ வெளியூர்: மார்கழி 23உ வியாழன் (7—1—54)

வேலூர் விஷயம்-சட்ட சபையில் புயல்

—(:)—

தி. மு. கழக நடைமுறை தெரியாத எம். எல். ஏ.-வின் நாத்தழும்பு!

—(:)—

நரிக் குணம் படைத்த பிரதமரின் வாய்மதம்!

சென்னை, ஜன. 5—

"பண்டித நேரு அண்மையில் சென்னைக்கு வந்திருந்த போது, மவுண்ட் ரோடில் அவருக்குக் கருப்புக் கொடி காட்ட, தி. மு. கழகத்தினருக்கு போலீஸ் கமிஷனர் ஜெனரல் அல்லது எழுத்து மூலமான அனுமதி கொடுத்தாரா?"

என்று, இன்று, சட்ட சபையில் தோழர் அரங்கநாதன் கேட்டார்.

"கருப்புக் கொடி காட்ட அனுமதியோ, ஸ்ஷென் கொடுக்கப்படவில்லை; ஆதரவு—எதிர்ப்பு ஆகிய இரு கோஷ்டியினரிடையே கைகலப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக, வெவ்வேறு இடங்களில் இரண்டு கோஷ்டியினர் இருக்க வேண்டும் என்ற போலீஸ் கமிஷனர் உத்திரவிட்டதாகத் தெரிகிறது,"

என்று, முதன் மந்திரி ஆச்சாரியார், அக்கேள்விக்குப் பதிலளிக்கையில் சொன்னார்.

காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர்:—"கருப்புக் கொடி காட்டியவர்களுக்கு, போலீசார், சவுகரியமான இடம் ஒதுக்கி, பாதுகாப்பு அளித்தனரா?"

முதல் அமைச்சர்:—"இது உறுப்பினரின் கருத்து. நேருவுக்கு வரவேற்பளிக்கவும், எதிர்ப்பு காட்டவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதில் யாரையும் தடுக்க அரசாங்கம் விரும்பவில்லை. அதே சமயத்தில் இருதரப்பினரிடையே கைகலப்பைத் தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது."

ஏ. ராமசாமித் தேவர் (கா):—"போலீஸ் உத்தரவுக்குப் பணியும் அளவுக்கு தி. மு. கழகத்தினர் நல்ல பிள்ளைகளாகி விட்டார்களா?"

முதல் அமைச்சர்:—"சாதாரணமாக வேறுவழியில்லாத போது மனிதர்கள் பணிந்துதான் ஆக வேண்டும்."

காங்கிரஸ் உறுப்பினர்:—"அப்பொழுது யாருக்காவது காயமேற்பட்டதா?"

முதல் அமைச்சர்:—"கழகத்தவருக்குக் காயமேற்பட்டதாக அவர் தன் காயத்தை எல்லோருக்கும் காட்டி, கைகலப்பை அதிகரிக்க முயற்சித்ததால் போலீசார் அவரை அப்புறப்படுத்தினர்."

சேரிகள் நல வளர்ச்சி மசோதா

சென்னை, ஜன 5—

சென்னை சேரிகள் அபிவிருத்தி மசோதா, இன்று காலை சென்னை சட்ட சபையில் நிறைவேற்றப் பட்டது.

"எனக்கு சர்க்காரில் சம்பந்தமிருந்தால் இந்த மசோதாவை இந்த சபையினருக்கும் அமுலாக்குவதற்கான இருந்த தன்மை அடுத்த கூட்டத்தில் கொண்டு வருகிறேன்,"

என்று முதல் அமைச்சர் ஆச்சாரியார் உறுதிமொழி கூறினார்.

மசோதாவை விளக்கி, சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி பேசுகையில் கூறியதாவது:—

"சென்னை நகரில் பல இடங்களில் சேரிகளின் நிலை மோசமாக இருக்கிறது. அது நகரின் சுகாதாரத்திற்கு கேடு விளைகிறது. தனிப்பட்ட நிலங்களிலுள்ள சேரிகளை அப்புறப்படுத்துவதில் கஷ்டமிருக்கிறது. அந்தவகை நிலங்களை சர்க்கார் கைக்கொள்ள அதிகாரம் அளிக்கும். ஐந்து வருட சராசரி வருவாயைப்போல 20 மடங்கு நஷ்ட ஈடு கொடுக்க மசோதாவில் வசதி செய்யப்பட்டிருக்கிறது," என்றார்.

மற்றவர் காந்தியாரைப் பாராட்டுவதை ஆச்சாரியார் ஒப்புகிறார்!

★

சென்னை, ஜன. 5—

"நவம்பர் மாதம் 23-ந் தேதி வேலூர் நகரில், இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையில் நடைபெற்ற கலவரத்தின் காரணமாக, 144 தடை உத்திரவு அந்நகரின் சில பகுதிகளுக்குப் போடப்பட்டது"

என்று, இன்று நடைபெற்ற சென்னை சட்ட சபையில், முதல் மந்திரி ஆச்சாரியார், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் கூறியதாவது:—

"டிசம்பர் 4-ந் தேதி, அந்நகர் நகராட்சி மன்றம், கூடிய எண்ணிக்கை, பெரும்பான்மை வாக்குகள் பெற்று, நகராட்சிப் பூங்காவில் உள்ள காந்தியார் சிலையை, தோழர் சி. என். அண்ணாதுரையைக் கொண்டு திறக்க செய்வது என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்த முடிவை எதிர்த்து, தீர்மானத்தை நீக்குவதற்கு பல உறுப்பினர்கள் முயற்சித்தார்கள் என்று தெரியவருகிறது.

"நகராட்சி மன்ற முடிவை, நாமக்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள் தீவிரமாக எதிர்க்கிறார்கள் என்றச் செய்தி சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டது.

"இவையனைத்தும் ஒன்றாகி, மேலும் அமைதிக்குத் தீமை விளைவிக்குமோ என அஞ்சி, நகரின் சில பகுதிகளில் மட்டுமே நடைமுறையில் இருந்துவந்த 144 தடை உத்தரவை, மற்றப் பகுதிகளுக்கும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

"சிலை திறப்பு பற்றிய நிகழ்ச்சிகள் நீங்கலாக மற்ற கூட்டங்கள், ஊர்வலங்களைத்தையும் தடையுத்தரவின் மூலம் தடுக்கப்படவிட்டது.

"இதுவுமல்லாமல், ஏற்பாடு செய்திருப்பதற்கு எதிராக, உரிமைப் பெறாதவர்களும், வேறு பசாவது இரகசியமாகவும் சிலையைத் திறப்பதிலிருந்து தடுப்பதற்காக, சிலைக்கு போலீஸ் காவல் கலெக்டரால் போடப்பட்டது.

"சர்க்காரின் அறிவுரையை மதித்து நடப்பர் என்று எதிர்பார்க்கப்பட்ட சிலருக்கு சர்க்கார் அதிகாரப்பற்ற அறிவிப்பின் மூலம், நகராட்சி மன்ற முடிவு அமைதியான முறையில் நிறைவேற்றப்பட அனுமதிக்க வேண்டும் என்று சர்க்கார் ஆலோசனையும் கூறியது."

தோழர் ஏ. கோவிந்தசாமி: "இன்னும் அங்கு கலவரம் இருக்கிறதா? தடை உத்திரவு நீடிப்பதேன்?"

முதலமைச்சர்:— "கூடிய விரைவில் தடை உத்தரவு நீக்கப்படும். ஆனால் இன்னமும் கலக உணர்ச்சி நீடிக்கிறது. உத்திரவு நீடிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

கூட்டத்திற்குத் தடை விதித்ததை கோவிந்தசாமி கண்டிக்கிறார்

'அறியோம் நாம்' என்று ஆச்சாரியார் விழிக்கிறார்!

எல்லை காந்தி விடுபட்டார்

பஞ்சாப் எல்லையைத் தாண்டத் தடை

கராச்சி, ஜன. 5—

எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கானை விடுதலை செய்யும்படி பாகிஸ்தான் சர்க்கார் நேற்று உத்திரவிட்டது. எனினும், அவர் விடுதலையாக இன்னும் சில தினங்களாகலாம் எனத் தெரிகிறது.

அதே சமயத்தில் எல்லைப்புற சர்க்காரும், அம்மாநிலத்தில் மொத்தமுள்ள 45 அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும், முன்னாள் முதல் அமைச்சர் டாக்டர் கான் சாகிப் உட்பட மற்றவர்கள் மீதுள்ள தடைகளை நீக்கியும் உத்திரவு பிறப்பித்துள்ளனர்.

கான் அப்துல் கபார்கானின் விடுதலை பற்றி வெளியான சர்க்கார் அறிக்கை, அவர் இப்போதைக்கு பஞ்சாபிலேயே வசித்து வரவேண்டும் என்று கூறுகிறது.

எல்லா அரசியல் கைதிகளிடமிருந்தும் பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் திருப்பித் தரப்படுமென்று எல்லைப்புற முதல் மந்திரி சர்தார் அப்துல் ரஷீத் நிருபர்களிடம் கூறினார்.

இரண்டு திங்களாக ஒரே ஆசிரியை 200 பிள்ளைகளைக் கட்டி அழுகிறார்

புதிய திட்டத்திலும் அதற்குப் பரிகாரம் கிடையாது

உசிலம்பட்டி, ஜன. 5—

இக்கரிலுள்ள ஜில்லா போர்டு பெண் பள்ளியில் 2 மாத காலமாக 100க்கு மேற்பட்ட பெண் குழந்தைகளை விட்டு முறைப்படி 200 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியை பாடம் சொல்லித் தருகிறார். இரு ஆசிரியைகள் ஒய்வு பெற்றுக் கொண்டதையும், இன்னொருவர் விடுமுறை எடுத்துக் கொண்டதையும் தெரிகிறது. இது பற்றி மதுரை போர்டு நிர்வாகியிடம் இவ்வூர் சேர்மன் திரு. வீ. ... னை நகர் காங்கிரஸ் ... உறுப்பினர் திரு கே. வி முருகன் ஆகியோர் முறையிட்டும் இதுவரை பலன் இல்லை.

நாகபுரியில் ஆசிரியர்கள் மாநாடு

நாகபுரி, ஜன. ...

பள்ளி ஆசிரியர்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளைப் பற்றி கூடி ஆலோசிக்கவும், தங்கள் நிலையை உயர்த்த ஒருமுகமாக கோரிக்கை விடுக்கவும் அகில இந்திய ... முள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சுமார் 10,000 ... அடங்கிய மாநாடு ஒன்று நடைபெறுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கைத்தறித் துணி விற்பனை

—(:)—

ஜன. 10 முதல் 13-ம் நாள் வரை

—(:)—

நான்கு நாட்கள் நாடெங்கும் கழகத் தோழர்கள் நடத்துவர்

கதியற்று நிற்கும் ஏழைக் கைத்தறியாளரின் கண்ணீரைத் துடைக்கவும், அவர்களைக் கைதூக்கி விடவும், பொங்கற் புது நாளைப் பொலிவோடும், பூரிப்போடும், பெருமையோடும் நாடெங்கும் கொண்டாடும்படி செய்யவும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், ஜனவரித் திங்கள் 10-ம் நாளிலிருந்து, 13-ம் நாள் வரை ஊர்தோறும் கைத்தறித் துணி விற்பனை செய்ய வேண்டுகிறேன்.

அண்ணாதுரை.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

சென்னை 6—1—1954 புதன்

'அந்த நாளும் வந்திடாதோ!'

மறைந்த உத்தமர் காந்தியாரை 'தேசப் பிதா' என்று குறிப்பிடுகிறார்களேயல்லாது 'காங்கிரஸ் பிதா' என்று இதுவரை எந்தக் காங்கிரஸ்காரர் கூறவும் நாம் கேட்டதில்லை. நாடு, இனம், நிறம், மொழி, கலை, நாகரிகம் எதுவாக இருந்தாலும், இந்தியத் துணைக்கண்டத்தில் பிறந்த அனைவருக்கும் 'பிதா' என்ற கருத்தில்தான் காங்கிரசார் உத்தமர் காந்தியை 'தேசப் பிதா' என்று சொல்லுகிறார்கள். இந்தக் கொள்கையில் மாறுபட்ட கருத்து ஒருவருக்கும் இருக்க நியாயமில்லை எனவே, இந்தியத் துணைக்கண்டத்தில் பிறந்த அனைவருக்கும் அவர் பொதுவானவராகிறார்.

உத்தமர் காந்தியாரை அனைவருக்கும் பொதுவான 'பிதா'வாகச் சிறப்பித்துக் கூறிவிட்டு, அவர் தங்களுக்கு மட்டுந்தான் சொந்தமானவர் என்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சிலர் 'காபிரைட்' பாராட்டுவது கொஞ்சமும் பொருந்தாது. குறுகிய ஒரு அரசியல் கட்சிச் சிறைக்குள் 'தேசப் பிதா'வைப் போட்டு அடைத்துவிடாமல், அவரை விடுவித்து அனைவருக்கும் பொதுச் சொத்தாக்குவதுதான் பொருத்தமுடையதாகும். ஏற்கனவே, இதைக் காங்கிரஸ் கட்சியினர் ஐயத்திற்கிடமின்றி செய்திருக்க வேண்டும். ஆனால் தவறிவிட்டார்கள். காங்கிரஸ் கட்சியையே எல்லைக் கோடுகளாக்கி 'தேசப் பிதா'வைக் கட்டிப்போட்டு வைத்திருக்கும் சிற்சில காங்கிரஸ் கட்சியினரின் கண்மூடி வழக்கு இனியாவது தொலைந்தாக வேண்டும். இத்துறையில் காங்கிரஸ் கட்சியினருக்கு இனி நல்லறிவு பிறக்குமென்றே நம்புகிறோம். அப்பொழுதுதான் அவர்கள் சொல்லும் – செயலும் ஒன்றியிருக்கும் நிலை ஏற்படும்.

உத்தமர் காந்தியாரின் கோட்பாடுகளை மேல்நாடுகள் பின்பற்ற வேண்டுமென்றும், அப்பொழுதுதான் உலகில் நாம் கண்டுவரும் மிருகச் செயல்கள் தொலைந்து மனிதப் பண்பு வளருமென்றும், உலக இடுக்கண்கள் அனைத்தையும் போக்கும் அருமருந்தாக உத்தமர் கோட்பாடுகள் இருக்கின்றன என்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் அடிக்கடி கூறி வருவதை நாம் தினம் தினம் கேட்டு வருகிறோம். அந்த நாள், எந்த நாளோ என்று நாம் எதிர்பார்த்துக்கொண்டும் இருக்கிறோம்.

உத்தமரின் கோட்பாடுகள் உலகமெலாம் பரவி சிறப்புப் பெறவேண்டும் என்று விழைகிறவர்களிடம், உத்தமரின் கோட்பாடு வேர்விடக் காணோமே என்று நாம் நினைக்கும் போது நமக்கு வேதனை கலந்த வெட்கமே ஏற்படுகிறது எல்லையைக் கடந்து உலக மக்களின் உள்ளங்களில் எல்லாம் நிரம்பி, அவர்கள் மன மாசு மாய வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள், தங்கள் மன மாசுகளைப் போக்கிக்கொள்ள, உத்தமரின் கோட்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளத், தவறிவிட்டுத் தேங்கி நிற்பதையே நாம் காண்கிறோம். இந்த அவலக் காட்சி, எவருக்குத்தான் துயரத்தைக் கொடுக்காமல் இருக்கும்?

'உத்தமரை அனைவரும் போற்ற வேண்டும்; அவர் போதனையால் அனைவரும் நற்பயன் பெறவேண்டும்; காடாகக் கிடக்கும் நாடு மீண்டும் நாடாகச் சிறப்புற்று விளங்க அவர் வகுத்த வழி நின்று, இயங்க வேண்டும்' என்று காங்கிரஸ் கட்சியினர் விரும்புவது, செயலளவில் நூற்றுக்கு நூறு வெற்றி பெறவேண்டுமானால், உத்தமரைப் பாராட்டும் உரிமையை, முதல் முதலாக, இந்தியத் துணைக்கண்டத்தில் பிறந்த அனைவருக்கும், கட்சி பேதம் பாராட்டாமல் பொதுவாக்க வேண்டும். இந்த உயர்ந்த போக்கிற்கு முன்னேற்பாடாக, முதல் முதலாகக் காங்கிரஸ் கட்சியினரே காந்திய வழி நின்று ஒழுகக் கற்க வேண்டும்.

காந்திய வழி நிற்க—நல்ல பழக்கம் பெற்றிருப்பவர்களாக வேலூர் காங்கிரஸ் கட்சியினரில் சிலராவது இருந்திருப்பார்களானால், நமது தி மு கழகப் பொதுச் செயலாளர், உத்தமர் காந்தியார் சிலையைத் திறந்து வைப்பதற்கு அவ்வளவாக ஆயாசப்பட்டிருக்கமாட்டார்கள். அதற்கு மாறாக, அவர்களே அச் சூழ்நிலையை, பிறரிடமிருந்து கட்டிப் பறித்துக் கொள்வதில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றிருப்பார்கள் இந்த வெற்றி ஒரு பக்கம் இருக்க, காந்திய நல்லறத்தின் பால் தங்களுக்குள்ள ஆழ்ந்த பற்றையும் உலகிற்கு எடுத்துக் காட்டுவதில தனிப் பெரும் வெற்றியும் பெற்றிருப்பார்கள். அதைக் கண்டு, மற்றவரும் காந்திய அற வழி நிற்க வேண்டும் என்பதில் புத்துணர்ச்சியும் பெற்றிருப்பர். இதன் பலனாகக் காந்தியத் தொண்டர் குழாமும் பெருகி இருக்கும். இவ்வளவு நல்விளைவுகளையும் ஒரு சிறு [illegible] வழுவல், கருத்துக் குழப்பத்தின் காரணத்தால், காங்கிரஸ் கட்சியினர் தொட்டுக் கவிழ்த்துவிட்டார்கள். அவர்கள் செயல் கண்டு இரங்குகிறோம்; மனமார வருந்துகிறோம். இனியும், இது போன்ற துறைகளுக்கு, இடமளிக்கக் கூடாது என்று அவர்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆதாரபூர்வமாகப் பார்த்தால் அதாவது காங்கிரஸ் கட்சி என்ற நோணத்தில் இருந்து நோக்குவதானாலும்கூட, உத்தமர் காந்தியார் காங்கிரஸ் கட்சியில் சாதாரண உறுப்பினராகக்கூட இறுதிவரையில் இருந்ததே இல்லை எனவே, அவரைக் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர் என்று காங்கிரசார் சொல்லுவதற்கு துளியும் இடம் கிடையாது. இதை அடிப்படையாகக் கொண்டு பார்ப்பதனால் உத்தமரின் சிலையைத் திறப்பதில், மற்றவர்களுக்கு உள்ள உரிமை அளவு காங்கிரஸ் கட்சியினருக்கு இல்லை என்று கூடக் கூறலாம். உத்தமர் காந்தியார் ஒரு காங்கிரஸ் கட்சிக்காரராகக் கலந்திருக்கவில்லை என்பதில் மறைந்துகிடக்கும் மகத்தான உண்மையை, காங்கிரஸ் நகராட்சிமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். அப்படிப் பார்த்திருந்தால், உத்தமர் சிலையைப் பொதுச் செயலாளர் திறந்து வைப்பதில் இவ்வளவு அதிருப்தி, அவர்கள் கொண்டு இருக்கமாட்டார்களென்றே நம்புகிறோம். நிற்க,

ஒருவர் கருத்தில், மற்றவர் கொள்ளும் நியாயமான ஐயப்பாட்டிற்காகவும், தவறு எனக் கண்டால் கிளம்பும் கண்டனத்திற்காகவும், ஒருவருக்கு ஒருவர் பகைவர் என்று கொள்வது நாகரீகம் ஆகாது. அது மனிதப் பண்பும் அல்ல. கருத்து வேற்றுமை வேறு; ஒருவரை ஒருவர் மதிப்பது வேறு. கருத்து முரண்பாட்டிற்காக ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இது காட்டு முறை. இதை அரசியல் கட்சியினர் அனைவரும் விட்டுத் தொலைப்பதே நியாயம். வரவேற்கத்தக்கது அப்பொழுதுதான் நாடு சிறப்புறும்.

பிறப்பில் உயர்வு - தாழ்வு பேசிடும் வருணாஸ்ரமக் கண்ணோட்டத்தால் நாம் சீரழிந்தது போதும். இன்னும் அந்தக் கொடிய விலங்கிலிருந்து நமது மக்கள் முழுதும் விடுபடவில்லை. விடுதலை பெற முயற்சி பலமாக நடைபெறுகிறது இத்துறையில் மேலும் முயற்சி தேவை—பல நூறு மடங்கு!

இந்நிலையில், அழிந்துவரும் அந்தச் சனாதனத்தினிடத்தை நிரப்புவதற்கென்று, புதிய அரசியல் சனாதனத்தைப் புகுத்துவது வேண்டாம்—அறவே வேண்டாம். அது மாபெரும் தீது. பயங்கர விளைவுகள் கொண்டது. எனவே அரசியல் கட்சிகளின் வரையறைக்குட்பட்டுத்தான் நமது பணி அனைத்தும் என்று தீர்மானித்து விடாமல், எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவாக உள்ள பொதுப் பிரச்னைகளின் வெற்றிக்கு காந்திய வழி நின்று உழைப்போம வரீர், என்ற பொதுச் செயலாளரின் கோரிக்கையை எடுத்துக் காட்டி, இதை முடிக்கிறோம்.

கோசல்ராம் தேர்தல் ரத்து

தஞ்சாவூர், ஜன 4—

திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளம் தொகுதியிலிருந்து சட்ட சபைக்குத் தேர்தெடுக்கப்பட்ட கே. டி. கோசல்ராமின் தேர்தல் செல்லுபடியாகாதென்று தேர்தல் விசாரணை மன்றம் இன்று தஞ்சாவூரில் தீர்ப்பளித்தது. அவருடைய தேர்தலும் ரத்து செய்யப்பட்டது.

மனுதாரராகிய மேகநாதனுக்கு கோசல்ராம் ரூ 115க செலவுத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டது.

மேகநாதன், தான் அந்தத் தொகுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட வேண்டுமென்று கோரியிருந்தது, மன்றத்தால் ஒப்புக் கொள்ளப்படவில்லை.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் ஆறு ஆண்டு காலத்திற்குக் கோசல்ராம், தேர்தலுக்கு நிற்கக் கூடாதெனத் தீர்ப்பு கூறப்பட்டது.

பனை மர நிலங்கள்

வரி வசூலிக்கப்படும்

சென்னை, ஜன. 4—

"பனைமரத்துக்கான வரி ஒழிக்கப்பட்டது; ஆனால், பனைமரங்கள் இருந்த நிலத்திற்கு வரி வசூலிக்கப்படுகிறது. ஏற்கனவே இதற்காகக் கொடுக்கப்பட்ட நிலவரியைவிட அதிகமான வரி வசூலிக்கப்பட வேண்டாம் என சர்க்காரால் உத்தரவிடப்பட்டிருக்கிறது. புஞ்செய் நிலத்தின் தரம், மண் வளம் ஆகியவற்றைப் பரிசீலித்து வரி அளவு நிர்ணய விஷயம் மீண்டும் ஆலோசனை செய்யப்படும்,"

—என்று, முதலமைச்சர் ஆச்சாரியார், அசெம்பிளியில் தெரிவித்தார்.

ரூ. 50 லட்சம் செலவில் விளையாட்டு அரங்கு!

கராச்சியில் 100 ஏகரா நிலவிஸ்திரணத்தில், விளையாட்டு அரங்கு கட்டப்படவிருக்கிறது. ஆசியாவிலுள்ள சில பெரிய ஸ்டேடியங்களில் இது ஒன்றாக இருக்குமாம். இந்த ஸ்டேடியத்தை நிர்மாணிக்க 50 லட்சம் செலவாகும் எனத் தெரிகிறது.

இந்தி மொழியின் பலவீனம்

—(:)—

அரசியல் சட்டம் தயாரித்தோர் ஏமாற்றம்!

புது டில்லி, ஜன. 5—

இந்தியாவில் அரசியல் சட்டம் தயாரித்தவர்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமான காலம், ஆங்கில மொழி, ஆட்சி மொழியாக நீடிக்கும் எனத் தெரிகிறது. இந்தி மொழி முன்னேற்றம் போதிய அளவுக்கு இராததினாலேயே, இம்மாதிரி கருத்தை, கல்வி நிபுணர்களும், உயர்தர அதிகாரிகளும் வெளியிட்டுள்ளனர்.

நிர்வாக, அரசியல் பதங்களுக்கு இந்தியில் வார்த்தைகள் அமைத்துள்ள ரகுவீரர் கமிட்டியின் ரிபோர்ட் போதிய ஆதரவை பெற்றுள்ளதாகத் தெரியவில்லை.

இந்தி அகராதி தயாரிக்கும் முயற்சிக்குக் காரணஸ்தரான மத்தியப் பிரதேசப் பிரதம மந்திரி ரவி சங்கர சுக்லாவுக்கு, பிரதமர் பண்டித நேரு எழுதியுள்ள கடிதத்தில். சில ஆங்கில பதங்களுக்கு, குறிப்பிட்டுள்ள இந்தி பதங்கள், பொருத்தமானதாக இல்லை என்று தெரிவித்திருப்பதாக நம்பப்படுகிறது.

ஆந்திர அமைச்சர் லட்சண்ணா ராஜினாமா

கர்நூல், ஜன. 4—

ஆந்திர சர்க்காரில் கிருஷிகலோகக் கட்சியின் பிரதிநிதியான ஜி. லட்சண்ணா இன்று கமநு மந்திரி பதவியை ராஜினாமா செய்தார். பட்ஜட் கோரிக்கைகளை ஆதரிக்க வேண்டும் அல்லது ராஜினாமா செய்ய வேண்டும் என்று மந்திரி சபை கோரியதின் பேரிலேயே ஜி லட்சண்ணா ராஜினாமா செய்தார்

தபால் கட்டணங்கள் உயரும்?

சில்லாம், ஜன. 5—

அடுத்த நிதி ஆண்டில் தபால் கட்டணங்கள் உயர்த்தப்படலாம் என்று யூனியன் தபால் தந்தி போக்குவரத்து மந்திரி ஜகஜீவன் ராம் நேற்று இங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் மறைமுகமாகத் தெரிவித்தார்.

ஆனால், 'தபால் கார்டின் விலை மட்டும் உயராது' என்றார்

தென்னாட்டுக் கலாச்சாரம்

இந்தியாவெங்கும் பரவியுள்ளது

திருச்சி, ஜன. 5—

தமிழ் நாடு இந்துப் பிரசாரகர் மாநாடு தென்னூரில் நடைபெற்றது. மாநாட்டிற்குத் தலைமை வகித்த எம். சத்தியநாராயணா தனது தலைமையுரையில், கூறியதாவது:

"இந்தியா முழுதும் பரவியுள்ளது தென்னாட்டுக் கலாச்சாரமே. சங்கரரும், இராமானுஜரும் பரப்பிய மதமும் பக்தியும் தான் அங்கு நிலைபெற்றுள்ளது" என்றார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தென்னாட்டார் உழைத்துக் கொடுக்கும் பலனை, வட நாட்டார் அனுபவிக்கிறார்கள்; நம் கலாச்சாரத்தின் வாயிலாகத் தான் இந்தியாவுக்கு பெருமை கிடைத்திருக்கிறது;" என்றார்.

வெள்ளி செங்கோல் பரிசு!

திருச்சி, ஜன. 3—

பாலக்கரை பழைய கோவில் மைதானத்தில், நடைபெற்ற வேதநாயகம் பிள்ளையின் நினைவு விழாவின்போது தோழர் எம். கே. தியாகராஜ பாகவதருக்கு திருச்சி நண்பர் கமிட்டி சார்பில் ஒரு வெள்ளி செங்கோல் பரிசளிக்கப்பட்டது. வேதநாயகம் அவர்களின் உருவப் படம் யானை மீது ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டது

அவரின் உருவப் படத்தைத் தோழர் அந்தோணி பீட்டர் திறந்து வைத்தார்.

"மனிதனும்—மிருகமும்"

நிபுணர்கள் முயற்சி!

சிங்கப்பூர், ஜன. 5—

மிருகம் என்றும், மனிதன் என்றும் பிரித்துச் சொல்ல முடியாத மூன்று பயங்கரமான காட்டுமனிதர்கள், போர்னியோ பெரக் மாகாணத்தில் காணப்பட்டதாக இங்கு தகவல் கிடைத்துள்ளது. இவர்களில் இருவர் ஆண்கள் என்றும், ஒருவர் பெண் என்றும் கூறப்படுகிறது.

மிருகத்திலிருந்து மனிதன் தோன்றினான் என்ற கொள்கையின் நம்பிக்கைக்கு இந்தக் காட்டு மனிதர்களால் சில தகவல்கள் வெளியாகலாம் என்று மனிதவர்க்க ஆராய்ச்சி நிபுணர்கள் கருதி, 'இவர்களைக் கண்டால் சுடக்கூடாது,' என்ற கோரிக்கையை வெளியிட்டுள்ளனர். இந்த நிபுணர்கள், அந்தக் காட்டு மனிதர்களைத் தேடிச் சென்றிருக்கின்றனர்.

வியாழன் கிரகம்

டெலிவிஷன் மூலம் காட்டப்படும்

லண்டன், ஜன. 5—

வியாழன் கிரகம் (ஜூபிடர்) ஜனவரி 14-ந் தேதியன்று பி. பி சி. டெலிவிஷனில் காட்டப்படும். 'டெலஸ்கோப்' கருவியில் காமிராவைப் பொருத்தி, அப்படியே படம் எடுக்கப்படுமாம். ஜூபிடர், சூரியனிலிருந்து 48 30,00,000 மைல் தூரத்தில் உள்ளது. உலகம், சூரியனிலிருந்து 9,30,00,000 மைல் தூரத்திலுள்ளது. இரண்டும், சூரியனைச் சுற்றி ஒரே கதியில் செல்லாததால் பூமிக்கும் வியாழனுக்குமிடையே எவ்வளவு தூரம் என்பதைச் சொல்வதற்கில்லை.

வேலூரில் பொதுச் செயலாளர்

உற்சாகமான வரவேற்பு—உளங் கனிந்த நன்றி

வேலூர், ஜன. 6—

வேலூர் நகராட்சி மன்றத்தாரால் கட்டப்பெற்ற உத்தமர் காந்தியாரின் உருவச் சிலையை தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை 3—1—54 மாலை 6-மணிக்கு, பல்லாயிரவர் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இந்த விழாவையொட்டி, வேலூருக்கு வந்த தி. மு. கழகப் பொதுச் செயலாளருக்கு நகராட்சி மன்றத்தினர், வரவேற்பளித்தனர்.

காஞ்சியிலிருந்து காலை 9 மணிக்குப் புறப்பட்டு, வேலூர் செல்லும் வழியில், வாலாஜா—காந்தி மிஷன் அனாதைச் சிறுவர்கள் ஆசிரமத்தின் நிர்வாகி தோழர் கல்யாணராம (அய்யர்) அவர்களின் விருப்பத்துக்கிணங்கி, அந்த ஆசிரமத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

குழந்தைகள், பொதுச் செயலாளரை வரவேற்றனர். அங்கு சிறிது நேரம் தங்கி, பள்ளியைப் பார்வையிட்ட பின் (விபரம் பிறகு) நேராக வேலூர் வந்தடைந்தார்.

காலை 9 மணிக்கு நகராட்சி மன்றத்தின் முன்னிலையில் பொதுச் செயலாளரை நகர சபைத் தலைவர் தோழர் வி ஆர் சீதாபதி பி.ஏ.,பி.எல். அவர்களும், நகர சபை கமிஷனரும், கவுன்சிலர்களும் வரவேற்று, அழைத்துச் சென்றனர். நகர சபை வரவேற்பையொட்டி, அதற்கென அமைக்கப்பட்டிருந்த அலங்காரமான பந்தலில், மேற்படி விழா, நடைபெற்றது. பாண்டுவாத்தியங்கள் முழங்க, விழா ஆரம்பமாயிற்று. வரவேற்பு விழா தொடங்கியதும் நகரசபைத் துணைத் தலைவர் ராமுலு(நாயுடு) அவர்கள், நகர சபை உறுப்பினர்களையெல்லாம் பொதுச் செயலாளருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பிறகு, நகரசபைத் தலைவர் தோழர் சீதாபதி அவர்கள், பொதுச் செயலாளருக்கு, நகராட்சி மன்றச் சார்பில், வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

அந்த வரவேற்பில், பொதுச் செயலாளர் அடக்குமுறைக்குள்ளானது பற்றியும், அவர் ஆற்றிவரும் தொண்டுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

வரவேற்பிதழ் வாசித்து அளித்ததும், நகர சபையின் சார்பில், பொதுச் செயலாளருக்கு மாலை அணிவிக்கப்பட்டது.

வரவேற்புக்குப் பதிலளித்து, தோழர் அண்ணாதுரை பேசுகையில், நகர சபைக்குள்ள கடமைகள் பற்றியும், 'நகர சபைகளே நாட்டின் நிர்வாகத்துக்கு அடிக்கட்டுகள்,' என்றும் குறிப்பிட்டு, தனக்கு அளித்த இந்த வரவேற்பு தான் சார்ந்திருக்கும் கொள்கைகளுக்குக் கிடைத்த வரவேற்பாகக் கருதுவதாகவும் குறிப்பிட்டு (பேச்சு, பிறகு) எல்லாருக்கும் தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

நகரசபை உறுப்பினர் தோழர் சாரதி, நகரசபையின் அழைப்புக்கிணங்கி வந்தமைக்காக, நகர சபையின் சார்பில் தோழர் அண்ணாதுரைக்கு நன்றி தெரிவித்தார்.

நகரப் பெருமக்கள் பலரும், ஏராளமான பெண்டிரும், மாணவ மாணவிகளும், பொது மக்களும் பல்லாயிரக் கணக்கில் திரண்டிருந்தனர்.

★

கழகத் தோழர்களிடையே...

வரவேற்பு வைபவம் முடிந்து, 'முசிபரி' பங்களாவில் தங்கியிருந்த பொதுச் செயலாளரை, வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கிளைக் கழகத் தோழர்களும், இயக்கப் பிரமுகர்களும் வந்து சந்தித்து, கழக சம்பந்தமாகவும், மற்றும் பல பொது விஷயங்கள் பற்றியும் பேசிச் சென்றனர்.

* * *

மாலை 4 மணிக்கு, நகரசபை கவுன்சிலர்கள், பொதுச் செயலாளரோடு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

* * *

பிறகு, வடார்க்காடு மாவட்டக் கழகக் குழுவினர், பொதுச் செயலாளருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அங்கேயே, கழக ஊழியர்கள் கூட்டம் ஒன்று, நடைபெற்றது. அதில், பல கழகத் தோழர்கள், பொதுச்செயலாளருக்கு, மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அளித்தனர்.

ஊழியர்கள் மத்தியில் பேசிய வ. ஆ. மா. செயலாளர் தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, தூத்துக்குடி நிதிக்கு, விரைவில் பணம் சேர்க்கவேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைத்து, அன்று சேர்ந்த தொகையான ரூ. 236-ஐயும் அளித்தார்.

பிறகு, பொதுச்செயலாளர், எல்லோருக்கும் நன்றி கூறி, தூத்துக்குடி நிதியை விரைவில் நிரப்பவேண்டும் என்பதாக எடுத்துக் கூறி, விடைபெற்றுக் கொண்டார். தோழர் கோவிந்தசாமி, எம். எல். ஏ.-யும் ஊழியர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

★

வெள்ளம் போல் மக்கள்

அங்கிருந்து புறப்பட்டு, காந்தியாரின் உருவச் சிலை அமைத்திருந்த கோட்டை வெளிமைதானத்துக்கு வருமுன், சாலையின் இரு பக்கங்களிலும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். மைதானம் முழுமையும், மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. மேடைக்கு, நகரசபைத் தலைவரும், கமிஷனரும் பொதுச் செயலாளரை அழைத்துச் சென்றனர். சிலையைத் திறந்து வைக்குமாறு தோழர் சீதாபதி, பொதுச்செயலாளரைக் கேட்டுக்கொண்டார்.

திறப்பு விழா

அதிர்வேட்டுகள் முழங்க, இன்னிசை கீதம் ஒலிக்க, அழகுடன் மிளிர்ந்த ராஜாஜி பூங்காவுக்குள், விளங்கிய உத்தமரின் உருவச் சிலையைத் திறந்து வைத்தார். கமிஷனரும், நகர சபைத் தலைவரும், சிலையின் வேலைப்பாடுகளை எடுத்துச்சொல்லினர்.

'மகிழ்கிறேன்; நன்றி'

பிறகு, தன்னை இந்தப் பணியினைச் செய்யுமாறு பணித்த நகர சபையினருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, பொதுச் செயலாளர் பேசுகையில், காந்தியடிகள் போதித்த கொள்கைகளையும், தமிழ் நாட்டின் வரலாற்றில் இதுபோன்ற அரசியல் ஒற்றுமை முகிழ்ப்பதைத் தாம் வரவேற்பதாகவும் குறிப்பிட்டுப் பேசினார்.

விழா, முடியுமுன் மேற்படி சிலையை அமைப்பதில் ஈடுபட்ட கமிஷனர், கண்டிராக்டர் முதலியோருக்கு, நகர சபையினர் வழங்கிய அன்பளிப்புகளை அளித்து, தன்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டார். நகர சபைத் தலைவர் தோழர் சீதாபதியின் நன்றியுரையுடன், விழா இனிது முடிவுற்றது.

விழாவை வாழ்த்தி சென்னை அமைச்சர்களான தோழர்கள் ராஜாராம், மாணிக்கவேலர் ஆகியோரும், தோழர் நெடுஞ்செழியன் முதலிய பலரும் செய்திகள் அனுப்பியிருந்தனர். விழாவைக் காண, சென்னை, காஞ்சி முதலிய பகுதிகளிலிருந்தும், வடார்க்காடு மாவட்டத்தின் முக்கிய பகுதிகளிலிருந்தும் ஏராள மக்கள் வந்திருந்தனர்.

விழாவில் உள்ளூர்—வெளியூர் கழகத் தோழர்கள் ஏராளமாகக் கலந்து கொண்டனர்.

மற்றும் தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எம். எல் ஏ, தசரதன் எம். எல். ஏ., ராசவேலூர் எம். எல். ஏ., கண்ணன் எம். எல். ஏ., கவுன்சில் ஆப் ஸ்டேட் உறுப்பினர் தோழர் ராசகோபால், வக்கீல் சாமி நாயுடு, திருவண்ணாமலை ப. உ. சண்முகம், போளூர் சுப்ரமணியம், அரக்கோணம் கிருஷ்ணசாமி டாக்டர் தருமாம்பாள் அம்மையார், கண்ணபிரான், கன்னன், பஞ்சாட்சரம் ஆகியோரும் வந்திருந்தனர்.

ஐதராபாத் சட்ட சபை

'பூசல்' அடங்கியது

ஐதராபாத், ஜன. 3—

ஐதராபாத் சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தோழர் ராமகிருஷ்ண ராவ் மீண்டும் இன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்தலில் தோழர் ராமகிருஷ்ண ராவுக்கு 68 ஓட்டுகள், டி. ஜி. பிந்துக்கு 8 ஓட்டுகள்; பூல்சந்த் காந்திக்கு 3 ஓட்டுகள்; விநாயக் ராவ் வித்தியாலங்கார் 2 ஓட்டுகள்; ஜி. எஸ். மேல்கோட்டே 2 ஓட்டுகள்; கே. வி. ரெங்கா ரெட்டி 2 ஓட்டுகள் பெற்றனர்.

7 அங்கத்தினர்கள் சமுகமளிக்கவில்லை.

கூட்டத்திற்கு நேரு தலைமை வகித்தார்.

நேரு அவர்கள் பேசும்போது "தனது விருப்பம்போல் மந்திரி சபையை ராமகிருஷ்ண ராவ் திருத்தி அமைத்துக் கொள்ளலாம்" என்றார்.

சில தினங்களுக்கு முன்பு ராமகிருஷ்ண ராவ் காங்கிரஸ் கட்சியிலிருந்து ராஜினாமா செய்தார்.

ஐதராபாத் காங்கிரஸ் சட்ட சபைக்குள் ஏற்பட்ட பூசல்கள், இந்த வாக்கெடுப்பினால் தீர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர்

மதுரை, ஜன. 3—

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளராக தோழர் அஜய் குமார் கோஷ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பிரபல கம்யூனிஸ்டு தலைவர் பி. ஸி. ஜோஷி புதுக் கமிட்டியில் இடம் பெறவில்லை என்று தெரிய வருகிறது.

மத்திய கமிட்டி உறுப்பினர் தொகை 17-லிருந்து 39-க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

டிராம் தொழிலாளர்களுக்குவேலை

சென்னை, ஜன. 4—

அரசாங்க பஸ்போக்குவரத்து இலாகாவில் முன்னாள் டிராம் தொழிலாளர் 200 பேரை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்காக அரசாங்கம் ஒரு கமிட்டியை அமைத்திருப்பதாக இன்று சட்ட சபையில் மந்திரி கிருஷ்ணாராவ் கூறினார்.

மில் துணி தடை செய்யப்படுமா?'

'ஆம்' என்கிறார் நிதி அமைச்சர்!— 'அல்ல' என்கிறார் தொழில் அமைச்சர்!

சென்னை, ஜன. 4—

'சென்னை மாநிலத்தில், மில் துணி இறக்குமதி செய்வதைத் தடை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை," என்று சட்டசபையில் மந்திரி கிருஷ்ணாராவ் கூறினார்.

எம். பழனிபாண்டி கேள்விக்கு மந்திரி பதிலளிக்கையில், "தற்போது நூல் கட்டுப்பாடு எடுக்கப்பட்டுவிட்டபடியால் நெசவாளருக்கு நூல் கிடைப்பதில் கஷ்டமில்லை" யென்றார்.

வேட்டி, புடவை உற்பத்தியை கைத்தறிக்கே ஒதுக்கும் கோரிக்கையை ஓரளவு மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டுள்ளது என்றார்.

'மில் துணிகள் இறக்குமதிகள், இம்மாநிலத்தில் தடை செய்யப்படுமா?' என்று தோழர் பழனிபாண்டி கேட்ட கேள்விக்கு, மந்திரி பதிலளித்ததாவது:—

"அப்படியொன்றும் உத்தேசமில்லை; மத்திய சர்க்கார் மில் துணி வரி மூலம் ரூ. 85 லட்சம் சென்னைக்குக் கிடைக்கும்; அதன் மூலம் 50 ஆயிரம் நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும்; 85 லட்சம் ரூபாயில் நூல் மில்லும் ஏற்படுத்தப்படும் யோசனை, அங்கீகரிக்கப்பட்டுள்ளது," என்றார்.

"வேட்டி, புடவை உற்பத்தியைக் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென்ற சட்டசபைத் தீர்மானம், ஏன், மத்திய அரசாங்கத்தால் மதிக்கப்படவில்லை?" என்று, பழனிபாண்டி கேட்டதற்கு "கைத்தறி துணி கிடைமையிலிருந்து அடைந்திருக்கிறதென்றும், ஏற்றுமதியும் அதிகரித்தன்னதாகவும், 250 ஆயிரம் பேல்களிலிருந்து 500 ஆயிரமாகி சென்ற ஆறு மாதத்தில் 600 ஆயிரம் பேல்களாகி இருப்பதாகவும் மந்திரி சொன்னார்.

குறிப்பு:—மில் வேட்டி, புடவை இறக்குமதியை தடைசெய்யுமாறு மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கடிதமெழுதியுள்ளதாக, மந்திரி சுப்ரமணியம், சென்னை மேல்சபையில் சனிக்கிழமையன்று கூறியுள்ளார்.

மஜீத் படிப்பகம்

மதுரை, ஜன. 3—

29—12—53-ல், உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஏ. என் கலைசேகன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள்: ஏ என். கலைசேகன் செயலாளராகவும், மீ. செல்லம் துணைச் செயலாளராகவும், கே. வி. சாமி பொருளாளராகவும், மு மஜீத் கான், வீ. மாரிக்கனி, தனுஷ்கொடி ஆகியோர் விளம்பர உறுப்பினர்களாகவும், மா கு. சோலையப்பன் பொறுப்பாளராகவும், எம். முத்துச்சாமி, செந்தில்குமார் உட்பட 16 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும், சேவரத்தினம், நேசமணி ஆகியோர் நகர் கழகப் பிரதிநிதிகளாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடையநல்லூர்

பஞ்சாயத்து போர்டு கூட்டம்

26—12—53-ல், போர்டின் சாதாரணக் கூட்டம் தலைவர் எஸ். கே. முகம்மது யூசுப் சாஹிப் தலைமையில் நடைபெற்றபோது, மாதாந்திர வரவு — செலவுக் கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், நகரிலுள்ள வீதிகளைப் பண்படுத்தவும், குடிதண்ணீர் வசதியுள்ள கிணறுகளில் டாங்கிகள் அமைத்து, குழாய்கள் அமைக்கவும், நகரின் மத்தியில் வாசகசாலை அமைத்து, தின இதழ்களும், வார இதழ்களும் வாங்குவதற்கென ரூ. 300-ம் அனுமதிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

சாமிநாதபுரம்

தி. மு. கழகத் துவக்கம்

30—12—53-ல், சேலம் அரிசிப்பாளையம் சாமிநாதபுரம் (3-வது வட்டம்) தி. மு. கழகத் துவக்க விழாக் கூட்டம் தோழர் புஷ்பா பி. என். அம்மசெவுண்டர், எம். சி. தலைமையில் நடைபெற்றது. தோழர் கண்ணதாசன் கொடியேற்றி வைத்தார். தோழர் மு கருணாநிதி கழகத்தைத் திறந்து வைத்தார்.

* * *

கழகப் பொருளாளர் தோழர் பி. கே. செந்தப்பன் குழந்தைகள் இருவருக்கும் முறையே, 'பன்னீர் செல்வம்,' 'சௌந்தரபாண்டியன்,' என தோழர் கருணாநிதியால் பெயரிடப்பட்டது அதன் நினைவாக, தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக தோழர் கருணாநிதியிடம் ரூ. 2 நன்கொடையாக அளிக்கப்பட்டது.

அன்னதானப்பட்டி

தி. மு. கழகம்

27—12—53-ல், கழகக் கட்டடத்தில், தோழர் என். ராமதாஸ் தலைமையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பொங்கல் விழாவை தோழர் என். வி. நடராசன், தோழியர் பூங்கோதை ஆகியவர்களைக் கொண்டு சிறப்புற நடத்தவும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அனுதாபக் கூட்டம்

தூத்துக்குடி, ஜன. 4—

மேலச்சண்முகபுரம் தி. மு. கழக அங்கத்தினர் கூட்டம், தோழர் த. வெபெருமாள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி சதி வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள தோழர் கே. வி கே. சாமி அவர்களின் தாயார் 27—12—53-ல், ஈரால் கிராமத்தில் காலமானார் என்ற செய்தியைக் கேட்டு வருந்துவதாகவும், அவர் குடும்பத்தினருக்கு, கழகத்தின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மதுவிலக்கு அமுல்!

ஷில்லாங், ஜன. 3—

அஸ்ஸாமில் மதுவிலக்கை அமுல் நடத்துவதென்று மாநில சர்க்கார் தீர்மானித்துள்ளது. இதனால் ரூ. 1,20,000 வருமானம் குறையும். 'பார்பேடா' என்ற இடத்தில், முதல் தடவையாக மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டு, பின்னர் விஸ்தரிக்கப்படும்.

'திராவிடர் நாட்குறிப்பு'

'போர் வாள்' வெளியீடு

தி. மு. கழகச் செய்திகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு வெளி வந்திருக்கும் இந்த (1954) ஆண்டு 'போர்வாள்' நாட் குறிப்பு, முந்திய ஆண்டுகளில் வெளி வந்தவைகளைக் காட்டிலும் அளவிலே பெரிதாகவும் அழகாகவும் அமைந்திருக்கிறது. விலை ஒரு ரூபாய்தான்.

கிடைக்குமிடம்: போர் வாள் அலுவலகம், பவழக்காரத் தெரு, சென்னை—1.

வரப் பெற்றோம்

அம்பாள் கம்பெனி நாட் குறிப்பு

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரையின் மூவர்ணப் படத்துடன் கூடிய நாட் குறிப்பு அட்டை (காலண்டர்) வரப்பெற்றோம்.

செய்தி - அலைகள்

☆

இந்தியா 'நியூஸ் பிரிண்ட்' உற்பத்தி

ஒட்டவா, ஜன. 5—
'நியூஸ் பிரிண்ட்' உற்பத்தி செய்யும் நாடுகளின் அட்டவணையில், இந்தியா, பாகிஸ்தான் ஆகியவைகளின் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

* * *

பனிமலை மனிதனைத் தேட 10,000 பவுன்!

கல்கத்தா, ஜன. 6—
பனிமலை மனிதனைத் தேடும் முயற்சிக்கான தீவிர முஸ்தீபுகள் மும்முரமாக ஆரம்பமாகிவிட்டன. இம் முயற்சிக்காகப் பத்தாயிரம் பவுன் ஒதுக்கப்பட்டுள்ளது.

* * *

மக்கள் தொகை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 5—
இலங்கையில், மக்கள் தொகை மிகவும் அதிகரித்து வருகிறது; இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் 35 லட்சமாக இருந்த மக்கள் தொகை, இப்போது 80 லட்சமாக அதிகரித்துவிட்டது.

* * *

ஜகன்—நாடு கடத்தப்படுவோர்?

லண்டன், ஜன. 6—
பிரிட்டிஷ் கயானா முன்னாள் பிரதமர் ஜகன், தான் இந்தியன் என்று சொல்லிக் கொள்வது காரணமாக, அவரை, அந்நாட்டிலிருந்து நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று தெரிகிறது.

* * *

நிறுத்திவிட்டது!

பாங்காக், ஜன. 6—
தாய்லாந்திடமிருந்து அரிசி வாங்குவதை இந்தியா நிறுத்திவிட்டது. ஐரோப்பிய நாடுகள் பல, பிற செய்வதற்காக அரிசியை வாங்குகின்றன; இதனால் தாய்லாந்து, ஐரோப்பிய நாடுகளின் மார்க்கெட்டுகளைக் கைப்பற்ற முடியும்.

* * *

ஜலவாயுக்குண்டு வெடிக்கும்!

நியூயார்க், ஜன 5—
வருகிற வசந்த காலத்தில், ஜலவாயுக் குண்டு பசிபிக்கில் ஏதோ ஒரு இடத்தில் வெடிக்கப்படவிருக்கிறது. இதற்கான பயிற்சிகள் சில விமானிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. '836 என்கிற ராட்சச வெடிவிமானம், இந்த வெடி குண்டை ஏற்றிச் செல்லும் என்றும் தெரிகிறது.

* * *

நாயின் கண்ணீர்!

புது டில்லி, ஜன. 6—
செங்கோட்டை இராணுவ யூனிட் ஒன்றைச் சேர்ந்த நாய் ஒன்று அதன் சொந்தக்காரர் இருவர் மாண்டுவிட்டதற்காகக் கண்ணீர் விட்டு கதறிய தகவல் கிடைத்துள்ளது. அந்தச் சவங்களைக் கண்டது முதற்கொண்டு, நாய், ஆகாரம் அருந்தவில்லை; இந்த நாய் சாலட்சணியாம்.

* * *

கம்பியில்லா டெலிபோன்

சில்சார், ஜன 5—
பிரம்மபுத்திரா நதிக்கு இரு கரைகளிலுமுள்ள இடங்கள், மற்றும் அஸ்ஸாம் மலைப்பகுதிகளிலுள்ள முக்கியமான இடங்கள் ஆகியவைகளுக்குக் கம்பியில்லா டெலிபோன் இணைப்புகள் போடப்படுகின்றன. இந்தக் கம்பியில்லா டெலிபோன், இந்தியாவிலேயே அஸ்ஸாமில்தான் முதல் தடவையாக போடப்படுகிறது.

வழக்கறிஞர் இரா. இளம்வழுதி

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலைய சார்பில், தூத்துக்குடி சதி வழக்கை திருநெல்வேலியிலேயே இருந்து நடத்தி வரும், வழக்கறிஞர் தோழர் இரா. இளம்வழுதி (ஆர். தண்டபாணி, அட்வகேட்) அவர்கள், நேற்றைய சென்னை வந்து, பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களையும், வழக்கறிஞர் நாராயணசாமி முதலியார் அவர்களையும் சந்தித்து, வழக்கு விபரம் பற்றியும், மேலால் ஆக வேண்டிய காரியங்களைப் பற்றியும் பேசிவிட்டு, ஞாயிறு இரவு நெல்லைக்குப் பயணமானார்.

ஈ. வெ. கி. சம்பத் சுற்றுப் பயணம்

★

ஜன. 14 : கரூர், பொதுக் கூட்டம், மாலை 6 மணி. இரவு 10 மணி திருச்சி நாடகம் நிகழ்ச்சி.

ஜன. 15 : தஞ்சை என். எஸ். கே. வாசக மன்றம் ஆண்டு விழா

ஜன. 16 : மாயவரம்

ஜன. 17 : சீர்காழி (இரவு 7-லிருந்து 10 மணி வரை)
திருவெண்காடு (மாலை 5-லிருந்து இரவு 7 மணி வரை)

தென்னார்க்காடு மாவட்டம் கழகத் தோழர்களுக்கு

"1953 ஜூலை 4, 5 தேதிகளில், தென்னார்க்காடு மாவட்ட தி. மு. கழக மாநாடு, தில்லையில் நடந்ததின் வரவு-செலவு கணக்குகளை முடிக்க வேண்டியிருப்பதால், மாநாட்டு பொருளாளர் மூலம் மாநாட்டுச் செலவுக்கெனப் பெற்றுச் சென்ற பணத்திற்கு, தோழர்கள் வில்லாளன், சக்கரவர்த்தி அவர்களும், பணப் பொறுப்பு எடுத்துக் கொண்ட மற்றத் தோழர்களும், முறைப்படி கணக்கை 12-1-54-ல், செங்கழுநீர் பிள்ளையார் கோவில் தெருவிலுள்ள சண்முக விலாசில், மாலை 3 மணி அளவில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்."

"அன்று, மேற்படி கணக்குகளைப் பூர்த்தி செய்வதுடன், 16-1-54-ல், திருப்பாதிரிப்புலியூர் தி. மு. கழகக் கட்டிடத்தில், பகல் 12 மணி முதல் 3 மணி வரை கூடி நடக்கும் மாவட்டச் செயற் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்," என்று மாவட்டச் செயலாளர் தோழர் இரெ. பாலகுருசாமி அறிவிக்கிறார்.

கைத்தறித் தொழில் அபிவிருத்தி

மேலும் நிதி உதவி

புதுடில்லி, ஜன 6—
கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக, 1953-54-ம் நிதி ஆண்டிற்கென மத்திய சர்க்கார் ஒதுக்கிவைத்துள்ள 4 கோடி ரூபாயிலிருந்து பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும் மேற்கொண்டு பல தொகைகளை கடனாகவும், மானியமாகவும் அனுமதித்திருக்கிறது.

இதுவரையில் இந்த நிதி ஆண்டில், மொத்தம் 2,55,85,331 ரூபாய் கடனாகவும், மானியமாகவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதில் 1,31,47,231 ரூபாய் மானியம்; 1,24,38,100 ரூபாய் கடன்.

கழகக் கூட்டங்கள்

☆

வனவாசி

7—1—54 வியாழன் மாலை 6 மணிக்கு

இடம் :
வனவாசி போர்டு ஆரம்பப்பள்ளிக்கு எதிரில் உள்ள மைதானம்

பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
ஈ. ஆர். கிருஷ்ணன்
ப. கண்ணன்

☆

திருச்சியில் தலைவர்கள் வரவேற்பு கூட்டம்

10—1—54 ஞாயிறு மாலை 5 மணிக்கு

டவுன் ஹால் முன்பு

தலைவர்: ஏ. பி. தர்மலிங்கம்

பேசுவோர் :
சி. என். அண்ணாதுரை
இரா. நெடுஞ்செழியன்
ஈ. வி. கே. சம்பத்
கே. ஏ. மதியழகன்
என். வி. நடராசன்

☆

தஞ்சையில்

11—1—54 திங்கள் மாலை 5-மணிக்கு தஞ்சை திலகர் திடலில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை உட்பட சிறை சென்ற தலைவர்களுக்கு வரவேற்பு நடத்தப்படும்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக

சேலம் அம்மாபேட்டை, ஜோதியில், 9—1—54 சனியன்று, 2 நாடகம் மாலை 6-30 மணிக்கும், இரவு 10-30 மணிக்கும், தோழர் ப. உ. சண்முகம் தலைமையில், சேலம் முத்தமிழ் மன்றத்தார் நடிக்கும் 'வரிமகன்' என்னும் நாடகம் நடைபெறும்.

சோவியத் கலாசார தூதுக் குழு

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும்

புதுடில்லி, ஜன. 6—
இந்திய சர்க்காரின் அழைப்பிற்கிணங்க, சோவியத் கலாசார தூதுக் குழு ஒன்று ஜனவரி மாத மத்தியில் இந்தியாவில் ஆறு வார காலம் சுற்றுப் பிரயாணம் செய்யும். சோவியத் கலாசார தூதுக் குழுவினரில், சுமார் 30 அங்கத்தினர்கள் இருப்பார்கள்; சோவியத்தின் பிரபல வாத்தியக்காரர்கள், பாடகர்கள், ஓவியர்கள் ஆகியோர் சிலரும், சர்க்கஸ் ஆட்டக்காரர்கள் இருவரும் இக்குழுவில் இருப்பர். டென்னிஸ் பெண்கள் கொண்ட இத்தூதுக் குழுவினர் பம்பாய், டில்லி, கல்கத்தா, சென்னை, பெங்களூர் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து, நடனக் கச்சேரிகளும், சங்கீதக் கச்சேரிகளும் நடத்துவார்கள். அவர்கள், இந்தியாவில் தங்கியிருக்கையில் இந்திய சர்க்காரின் விருந்தினராக இருப்பார்கள்.

மாஹிக்கு அருகில் புதிய பாதை!

புதுடில்லி, ஜன. 5—
மாஹிக்கு அருகில் உள்ள ரயில் பாலம் ஒன்றை, ரயில்,—ரோடு இரண்டுக்கும் உபயோகமாகும் பாலமாகச் செய்து, புதிய பாதை அமைக்க இந்திய சர்க்கார் உத்தேசித்துள்ளது. இதனால் பிரஞ்சிந்தியாவுக்குக் கிடைக்கும் சுங்க வரியில் ஆண்டொன்றுக்கு ரூ. 50,000 நஷ்டமேற்படலாம்.

'நம் நாடு' ஏஜண்டுத் தோழர்கட்கு

☆

"நம் நாடு" டிசம்பர் மாதயில், 1-1-54, 2-1-54 தேதிகளில் எல்லா ஏஜண்டுத் தோழர்களுக்கும் அனுப்பியுள்ளோம். 10-1-54-க்குள் பில் பாக்கித் தொகையை ஏஜண்டுத் தோழர்கள் இங்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டுகிறோம். இக்குள்ள டிபாசிட் தொகைக்குமேல் பில் பாக்கி ஏற்படும் சமயம், முன் அறிவிப்பின்றியே, "நம் நாடு" அனுப்புவதை நிறுத்தப்படுமென்பதையும் ஏஜண்டுத் தோழர்கட்குத் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

ஏஜண்டு ரத்து செய்யப்பட்டு, பழைய பாக்கியை இதுவரையில் அனுப்பாத தோழர்கள் இனியும் காலங் கடத்தாமல் உடனே அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

பொறுப்பாளர் : "நம் நாடு"
இராயபுரம், சென்னை.

2—1—54

★★★★★★★★★★★

வாழ்க்கை ஒப்பந்தம்

☆

17—1—54 ஞாயிறு காலை 10-30 மணி அளவில் கழுதி 5/94 எண்ணுள்ள இல்லத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி தலைமையில் தோழர் பொன்னுசாமிக்கும், தோழியர் பழனிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

★★★★★★★★★★★

வேலூர் விஷயம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பட்டவுடன், அரைச் சிலர் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளவும் கூடும். இதை ஒருவரும் விரும்பமாட்டார்கள்."

கோவிந்தசாமி :— "காந்தி சிலையை, தோழர் அண்ணாதுரை திறந்து வைக்கப்போவதைக் கண்டு காங்கிரஸ்காரர்கள் ஆத்திரமடைந்து, அவர்களாகவே காந்தி சிலையைத் திறந்துவிட முயற்சித்தனரா? இதுபற்றி சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்தது?"

முதலமைச்சர் :— "ஏற்கனவே இதுபற்றி விளக்கமாகப் பதில் கூறி இருக்கிறேன்."

ஏ. கோபால கவுண்டர் :— "சிலையைத் திறப்பதில் மாறுபட்டக் கருத்தினரிடை ஏதாவது கைகலப்பு ஏற்பட்டதா?"

முதலமைச்சர் :— "எனக்கு நிச்சயமாக ஒன்றும் தெரியாது; அப்படி ஒன்றும் கைகலப்பு நடக்கவில்லை என நான் நினைக்கிறேன்; ஆனால், அந்த அளவு அச்சமிருந்தது. கலகம் விளையக்கூடும் என்று நம்புவதற்கான காரணங்கள் இருந்தன."

வி. பாலகிருஷ்ணன் :— "அமைதிக்குப் பங்கம் உண்டாக்குவதாக எந்தக் கட்சி மிரட்டியது என்பதை, தடையுத்தரவு போடப்படுவதற்கு முன்பாகக் கண்டறியப்பட்டதா?"

முதலமைச்சர் :— "இது வெறும் கருத்தைப் பற்றினதல்ல. இப்படித்தான் சிலர் கருதுகிறார்கள், அப்படி அல்ல; ஆனால், கண் முன்பாகக் காணப்படும் உணர்ச்சியை சரிகட்ட வேண்டியதாக இருக்கிறது. எனவே, வெறும் கருத்து சிறப்பற்றுப் போகிறது."

கோவிந்தசாமி :— "வெள்ளைக்காரர்களும், பாகிஸ்தானிகளும் காந்தியாரின் கல்லறைக்கு மாலையிடும்போது, காந்தி சிலையை தோழர் அண்ணாதுரை திறப்பதற்கு காங்கிரஸ் கட்சியினர் ஆத்திரப்படுவது நியாயமாகுமா?"

முதலமைச்சர் :— "அரசியல் கருத்து வேற்றுமை உடையவர்களும், தங்களுடைய மரியாதையைச் சிலைக்கு செலுத்திக்கொள்வதை ஏன் காங்கிரஸ்காரர்கள் தக்கக் காரணமின்றி எதிர்க்கின்றனர் என்று உறுப்பினர் கேட்கிறார். அவர் சொல்வதை நான் முழு அளவில் ஒப்புக் கொள்ளுகிறேன். அதனால்தான், சிலை திறப்பில் மற்றவர் குறுக்கிடுவது தவறு எனக்கொண்டு, எவரும் தலையிடாமல் தடுக்கத்தான் போலீஸ் காவல் போட்டேன்."

தோழர் கோவிந்தசாமி :— "சிலையைத் திறக்க அனுமதித்த சர்க்கார், நான் பேச இருந்தக் கூட்டத்திற்கு தடை போட்டது ஏன்?"

முதலமைச்சர் :— "உறுப்பினருக்குத் தனித்த குறை இருப்பது எனக்குத் தெரியாது."

முன்னாள் ஷெரீபுக்கு மதுபான பர்மிட் இல்லை

அமைச்சர் தகவல்

சென்னை, ஜன. 6—
1953 அக்டோபர் 3-ம் தேதி வரை, சென்னை நகரில் 231 இந்தியர்களும், 602 இந்தியரல்லாதாரும் மதுபான பர்மிட் பெற்றிருந்ததாக சட்டசபையில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், மதுவிலக்கு மந்திரி குறிப்பிட்டார்.

"அண்மையில், ஷெரீப்பாக இருந்து விலகியவர் மதுபான பர்மிட் பெற்றவராயிற்றே, மந்திரியின் வேண்டுகோள் என்னவாயிற்று" என தோழர் விநாயகம் கேட்ட கேள்விக்கு, அமைச்சர் பதிலளிக்கையில், "உறுப்பினர் சொன்ன செய்தி தவறானது," என்றார்.

சிங்கப்பூர் தபால்

சென்னை, ஜன. 5—
'எஸ். எஸ். ரஜுலா' என்னும் கப்பல் 10—1—54-ல், சென்னையிலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்படும். சென்னை நகரின் தபால் நிலையங்களில் ஜனவரி 9-ந் தேதி காலை 10-மணிக்குமுன் போடப்படுகிற தபால்களும், ஜி. பி. ஓ. பிரதான நிலையத்தில் அன்று மாலை 3-மணிக்குமுன் போடப்படுகிற தபால்களும் இக்கப்பலில் சேரும்.

பாக்தாத், ஜன. 6—
இராக் மன்னர், பாகிஸ்தானுக்கு வருவது, நிச்சயமாகிவிட்டது. ஈராக்கிலுள்ள பாகிஸ்தான் ஸ்தானிகர், கராச்சிக்குச் சென்று, இவ்வருகை சம்பந்தமாக தன் சர்க்காருடன் கலந்து பேசிவிட்டு இங்கு வந்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, குரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.